1979 அக்டோபர் 29]

[முற்பகல் 9.40]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெரியவருக்குச் சொல்லிக் கொள்கிறேன், இது ஆண்டிமடம் சம்பந்தப்பட்ட கேள்வி, நீங்கள் கேட்கின்ற விவரங்கள் அமைச்சரிடம் இருக்காது.

திரு. ர. ஜெபமணி ; நான் விவரங்களைக் கேட்கவில்லை. வேண்டுகோள் தான். சாத்தான்குளம் பகுதியில் ஏறத்தாழ 9,000 ஏக்கரில் முந்திரி மரங்கள் இருக்கின்றன. இவையெல்லாம் அழிந்து கொண்டிருக்கின்றன. மேலும் இந்த மரங்கள் எல்லாம் அழிந்து போகாமல் அரசாங்கம் முன்வந்து நல்ல முறையில், கவனித்து, முந்திரி உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கவனத்தில் கொள்ளப்படும்.

மதுரையில் பால் வழங்கல்.

*வினா எண். 37—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை பால்வள நிறுவனத்தில் பாலித்தின் பைகள் மூலமாக பால் வழங்குவதை விரிவாக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தமிழ்நாடு பால் வள நிறுவனம், மதுரையில் பாலை பாலித்தீன் பைகள் மூலமாக் விநியோகம் செய்வதை அதிகரித்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பால்வளநிறுவனம் தனியார் களிடமிருந்துதான் பாலதீன் பைகளை வாங்குகிறது என்று சொல்லப்படுவது உண்மையா ? அது உண்மை யென்றால், அரசே இந்த பாலிதீன் பைகளை தயாரிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே பால்வள நிறுவனம் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக தயாரிக்கப்படும் பாலிதீன் பைகளை வாங்குகிறது, அத்துடன் தமிழ் நாட்டில் தனியார்களும் இந்த பாலிதீன் பைகளை உற்பத்தி செய்கிறார்கள். அவர்களிடமிருந்தும் டென்டர்கள் மூலமாக, யார் குறைவான விலைக்கு கொடுக்க முன்வருகிறார்களோ அவர்களிடமிருந்து பெற்றுகொண்டிருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை பால்வள நிறுவனம் மூலமாக பால் விநியோகம் செய்யப் படுகிறது. இப்படி வழங்கப்படுகின்ற பாலானது, கூட்டுறவு சங் கங்களிலிருந்து 8·9 அல்லது 9 சதமானம் கொழுப்பு சத்து இருந்தால் இரண்டு ரூபாய்க்கு குறைவாக அதாவது ஒன்றரை ரூபாய்க்கு வாங்கப்பட்டு, பின்னால் கொழுப்பு சத்தை எடுத் விட்டு 4·5 சத விகிதம் ஆக ஆக்கி அதை 2 ரூபாய் மார்ஜின் வைத்து அதிகமான விலைக்கு விற்கிறார்கள். இந்த மார்ஜின் அதிகமாக இருப்பதால் பால் உற்பத்தி செய்கின்றவர்களுக்கு கூடுதலான விலை கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலை வர் அவர்களே, பாலில் கொழுப்புச் சத்து 8 சத வீதம் இருப்பது மிகவும் கஷ்டம், எருமைப்பாலில் வேண்டுமானால் இருக்கலாம். 8 சத விகிதம் கொழுப்புச் சத்து இருந்தால் 2 ரூபாய் 10 பைசா உற்பத்தியாளருக்கு நிச்சயமாக கிடைக்கும். 8சதவீதமாக இருந்த தால் அதற்கு 2 ரூபாய்க்கு குறைவாக எந்த சங்கமும் கொள்முதல் செய்யவில்லை. அப்படி ஏதாவது சங்கங்கள் கொள்முதல் செய் வதாக இருந்தால், இதை என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும், விற்பனையைப் பொறுத்தவரையில் கொழுப்புச் சத்தை எடுத்துவிட்டு நிலைப் படுத்திய பாலாகத்தான் அனுப்ப படுகிறது. அதில் ஏற்படுகின்ற போக்குவரத்து செலவையெல்லாம் கணக்கிட்டுத்தான் விற்பனை விலை நிர்ணயிக்க படுகிறது. அதல்லாமல் அதிகமாக லாபம் சம்பாதிக்கவேண்டும் என்ற அடிப்படையில் அல்ல என்பதை தெரி வித்துக்கொள்கிறேன்.

## சென்னை பொது மருத்துவமனையில் இருதயவால்வுகள் பொருத்தும் பிரிவு.

*வினா எண். 38—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975 முதல் 1977 மார்ச் வரையில் சென்னை பொது மருத்துவமனையில் எத்தனை இருதய வால்வுகள் வாங்கப் பட்டன?

(ஆ) அவற்றுள், நோயாளிகளுக்குப் பொருத்தப்பட்டவை எத்தனை?

(இ) இருதய வால்வுகள் ஏதேனும் களவு போயினவா?